திரு. கு. ரமணி: கோவை இ.எஸ்.ஐ. மருத்துவ மனை பெரிய மருத்துவ மனை. அந்த மாவட்டத்தில் இருக்கும் அனைத்து இன்ஷுர்டு பர்சன்சுக்கும் இருக்கும்படியான மருத்துவ மனை. அங்கு சரியானபடி சிகிச்சை கிடைப்பதில்லை. டாக்டர்கள் கவனிப்பு குறைவாக இருக்கிறது. மருந்து கிடைப்பதில்லை. அதனால் கஷ்டப்பட்டு வெளி மருத்துவ மனைக்குப் போவது உண்மைதான். அமைச்சர் அவர்கள் முன்பு திடீரென்று விஜயம் செய்து பார்த்தது போல் இப்போதும் செய்து அங்கு வந்து விசாரித்து பார்த்தால் இந்த விவரங்களை நிரூபிக்க முடியும். அமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முன்பு திடீரென்று பரிசோதனை செய்தது உண்மை. அடிக்கடி திடீர் பரிசோதனை செய்தால் —It loses its charm அதிலே கவர்ச்சி இல்லாமல் போய்விடும். தேவையான மருந்துகள் எல்லாம் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அது இல்லையென்று சொன்னால் மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தால் அந்தத் தொகை ரி-இம்பர்ஸ்மெண்ட் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது ஒரு தொழிலாளரிட மிருந்தாவது புகாரை வாங்கிக் கொடுத்தால் இன்வெஸ்டிகேஷன் செய்ய உதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் காரணமாக மீண்டும் ஒரு முறை சர்ப்ரைஸ் செக் செய்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் காச நோய்ப் பிரிவு இல்லாத காரணத்தால் தனியார் மருத்துவ மனைகளுக்குச் செல்லும் நிலைமை இருக்கிறது. அங்கு காச நோய்ப் பிரிவு ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பல்வேறு பெரிய மருத்துவ மனைகளிலுள்ள காச நோய் பிரிவில் இ.எஸ். ஐ. தொழிலாளர்களுக்காக பெட் ரிசர்வ் செய்யப்படுகிறது. வேறு சில இடங்களில் தனியாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும் வெளியார் நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டித் தருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதிக்குத் தேவை என்று சொன்னால் அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

திருத்துறைப்பூண்டிக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 11—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1981 ஜனவரி 23]

(அ) திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு மேட்டுபாளையத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் சப்ளை செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. பொ. உத்திராபதி : திருத்துறைப்பூண்டி பேரூராட்சி என்பது 30,000 மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள பகுதி சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் குடிநீர் கொடுக்கவில்லை என்று சொல்லுவது வருத்தத்தை அளிக்கிறது. அமைச்சர் அவர்கள் திட்டம் இல்லையென்று கூறிவிட்டார்கள். திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு உலக வங்கியின் மூலம் கடன் பெற்று 30லட்சம் ரூபாய் செலவில் மேட்டுப்பாளையத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதாகச் சொல்லி அதிகாரிகள் இடத்தையெல்லாம் சர்வே செய்து வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேலை நடந்து கொண்டிருக்கலாம். அமைச்சர் அவர்களுக்கு இன்னும் தகவல் கிடைக்காமல் இருந்தாலும் அந்தத் தகவலைப் பெற்று துரிதமாக திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி பேரூராட்சியின் மக்கள் தொகை 30,000 என்று சொன்னது அதிர்ச்சியாக இருக்கிறது. 1971ல் அதன் ஜனத்தொகை 17,117. 1991ல் 24,000மும், 2006ல் 32,000 என்றும் ஜனத்தொகை ஆகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இப்போதே 30,000 ஜனத்தொகை என்றால் இதைவிட அதிர்ச்சி தரக்கூடியதய விஷயம் வேறு எதுவும் இல்லை. அநேகமாக அது சரியாக இருக்கக் கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன்.

1975ஆம் ஆண்டில் குடீடிநீருக்காக ஒரு திட்டம் போடப் பட்டது. ஆனால் 1977ம் ஆண்டு ஜூன் மாதத்திய தீரமானம் ஒன்றின் மூலம் பேரூராட்சி தனது நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் திட்டத்திற்கான முழுச் செலவையும் மானியமாக அளிக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டது மாண்புமிகு உறுப்பினர் கேட்பது போல—அரசு திருத்துறைப்பூண்டி பேரூராட்சியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் திட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியயும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக பேரூராட்சிக்கு அறிவித்துவிட்டது.